# முகவுரை

இத்தணிக்கை அறிக்கை, இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 151 (2)வது பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ளவாறு தமிழக ஆளுநருக்கு சமர்ப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கை, மாநிலத்தின் ஊராட்சி அமைப்புகள், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் அவை தொடர்பான துறைகள் மீதான இணக்கத் தணிக்கை மற்றும் பொருள் குறித்த இணக்கத் தணிக்கைகளின் குறிப்புகளை உள்ளடக்கியது.

2021-22 காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனை ஆய்வின்போது கவனத்திற்கு வந்த குறிப்புகளும், இதற்கு முற்பட்ட ஆண்டுகளில் கவனிக்கப்பட்டு முந்தைய ஆண்டு அறிக்கைகளில் இடம்பெறாமல் போன குறிப்புளும் இவ்வறிக்கையில் இடம்பெற்றுள்ளன. 2021-22ஆம் ஆண்டிற்குப் பிற்பட்ட நேர்வுகள் தகுந்த இடங்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்திய தணிக்கைத் தலைவரால் வெளியிடப்பட்டுள்ள தணிக்கை நெறிமுறைகளைச் சார்ந்தே தணிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மொழி மாற்றம் செய்யப்பட்ட இவ்வறிக்கையில் ஐயம் ஏதும் ஏற்படின், ஆங்கில அறிக்கையே அதிகாரப்பூர்வமானது என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.